# ஒலிக்கும் யாதவர் முரசு

## OLLIKUM YADAVAR MURASU

Volume : 17 Issue : 07 April : 2022 Tamil Monthly Price Rs.10/- Annual Subscription Rs.150/-
முரசு : 17 ஒலி : 07 ஏப்ரல் : 2022 தமிழ் மாத இதழ் விலை ரூ.10/- ஆண்டு சந்தா ரூ.150/-

ஸ்ரீ பிலவ வருடம், பங்குனி - சித்திரை மாதம்

உறவுகளோடு
இணைவோம், உயர்வோம்

யாதவமே பாரதம்
பாரதமே யாதவம்



# அழகர் ஆற்றில் இறங்குவது ஏன்? 10 நாள் விழாவின் சுவாரஸ்யக் கதை!!!

எல்லோருக்கும் ஐப்பசியில் தீபாவளி வரும். ஆனால், மதுரைவாசிகளுக்கு, சித்திரையிலும் ஒரு தீபாவளி. அழகர் ஆற்றில் இறங்கும் வைபவத்தை அந்த அளவுக்கு மிக விமரிசையாகக் கொண்டாடி வருகிறார்கள்.

திருவிழா நடக்கும் பத்து நாட்களும் ஊரே திமிலோகப்படும். மதுரை மற்றும் சுற்றிலுமுள்ள ஊர்களில் இருந்து குடும்பத்துடன் புறப்பட்டு வந்து சேருவார்கள். சுமார் பத்து லட்சம் பேருக்கு மேல் ஒரே இடத்தில் கூடும் திருவிழா இது. கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவத்தைச் சொல்வதற்கு முன், அவர் குடிக்கொண்டிருக்கும் அழகர்மலையின் சிறப்பையும் சொல்லியாக வேண்டும்.

மதுரைக்கு வடக்கே சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவில், அழகர்மலை கம்பீரமாகக் காட்சி தருகிறது. பார்ப்பதற்கு காளை வடிவிலிருப்பதால் இந்த மலைக்கு 'விரிஷபாத்ரி' என்று ஒரு பெயர் உண்டு. தன்மேல் ஏவி விடப்பட்ட சாபத்துக்கு விமோசனம் கேட்டு, எமதர்மன் இந்த மலைக்கு வந்து பெருமாளை வேண்டித் தவமிருந்தான். தவத்தை மெச்சி, எமதர்மனுக்கு பெருமாள் சாபவிமோசனம் தந்தபோது, 'இதேபோல் இங்கேயே தங்கியிருந்து பூலோக பக்தர்களுக்கும் அனுக்கிரகம் பண்ண வேண்டும்' என்று எமதர்மன் கேட்டுக்கொண்ட காரணத்துக்காக, இந்த மலையில் பெருமாள் குடிகொண்டதாகப் புராணம் சொல்கிறது.

எங்கும் இல்லாத சிறப்பாக இங்கு கள்ளழகராக அவதாரம் எடுத்து எழுந்தருளியிருக்கும் சுந்தரராஜப் பெருமாள் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என பஞ்சாயுதங்களுடன் காட்சி தருகிறார். அதுமட்டுமின்றி, இங்கு மட்டும்தான் பெருமாளின் கையில் உள்ள சக்கரம் புறப்படத் தயாராக இருக்கிறது. பக்தர்களிடமிருந்து அபயக்குரல் வந்தால், கண நேரமும் தாமதிக்காமல் துஷ்டர்களை அழிக்க வேண்டும் என்பதற்காக சக்கரத்தைப் பிரயோக நிலையிலேயே வைத்திருக்கிறார் பெருமாள்.

மூலவருக்கு அடுத்தபடியாக அதிமுக்கியமானவர் சோலைமலைக்கரசராக விளங்கும் உற்சவர்தான். 'அபரஞ்சி' என்ற அரியவகை தங்கத்தாலானவர் சோலைமலைக்கரசர். 'அபரஞ்சி' என்பது தேவலோகத் தங்கம் என்பதால், இந்தப் பெருமாளையும் தேவலோகப் பெருமாளாக பூஜிக்கிறார்கள். உலகத்திலேயே அபரஞ்சி தங்கத்திலான பெருமாள் சிலைகள் இரண்டு இடங்களில்தான் இருக்கின்றன. ஒன்று - அழகர் கோயிலில்! இன்னொன்று திருவனந்தபுரத்திலுள்ள அனந்த பத்மநாபசுவாமி கோயிலில்.

**அழகர் ஆற்றில் ஏன் இறங்குகிறார் என்று பார்ப்போமா?**

சுதபஸ் என்ற முனிவர், நூபுரகங்கையில் தீர்த்தமாடி, பெருமாளை நோக்கித் தவமிருந்தார். அந்தச் சமயத்தில் துர்வாச மகரிஷி, தன் பரிவாரங்களோடு அவ்வழியாக வந்தார். பெருமாளையே நினைத்துக் கொண்டிருந்த முனிவர், ரிஷி வந்ததைக் கவனிக்காமலிருக்கவே ஆத்திரமடைந்த துர்வாசர் 'மண்டுகோ பவ' (தவளையாக போகக் கடவாய்!) என சாபமிட்டார். உடனே தவளையாகிப் போன சுதபஸ், சாபவிமோசனத்துக்கு வழிகேட்டபோது, 'விவேகவதி தீர்த்தக்கரையில் (வைகை) நீ தவம் பண்ணிக்கொண்டிரு.

சித்ரா பௌர்ணமிக்கு மறுநாள் அழகர் அங்கு வந்து உனக்கு சாபவிமோசனம் கொடுப்பார் ' என சொல்லியிருக்கிறார் துர்வாசர். அதன்படி வைகைக் கரையில் தவம் பண்ணிக் கொண்டிருந்த சுதபஸ் முனிவருக்கு, விமோசனம் கொடுக்க அழகர் மதுரைக்கு வந்து போனதாகப் புராணங்கள் விவரிக்கின்றன.

சித்ரா பௌர்ணமிக்கு நான்கு நாள் முன்னதாகச் சித்திரைத் திருவிழா தொடங்கிவிடுகிறது.

**முதல் இரண்டு** நாட்கள் கோயிலில் இருப்பார் அழகர்.

**மூன்றாம் நாள்** மாலை மதுரையை நோக்கிப் புறப்படுகிறார். ஆரம்ப காலத்தில் கோயிலைவிட்டு கிளம்பும் அழகர் , அலங்காநல்லூர் போய்ச் சேருவார். அங்கு அழகரை குதிரை வாகனத்தில் தூக்கிவைத்து (ஆற்றில் இறங்குவதற்காக) அலங்காரம் செய்வார்கள். அழகருக்கு அலங்காரம் செய்யும் ஊர் என்பதால் , அலங்காரநல்லூராக இருந்து , பின்பு அலங்காநல்லூராக மாறிப்போனதாகச் சொல்கிறார்கள்.

அலங்காநல்லூரில் இருந்து தேனூருக்கு வந்து வைகை ஆற்றில் இறங்கும் அழகர், அதன் பிறகு வண்டியூருக்கு வந்து மண்டூக முனிவருக்கு (சுதபஸ்) சாபவிமோசனம் கொடுப்பார். இதனால் மண்டூர் என அழைக்கப்பட்டு அதுவே மண்டியூராகிப் பிறகு வண்டியூராகிப் போனதாம்.

கள்ளர் கொண்டை, கொண்டையில் குத்தீட்டி, கையில் வலைதடி (பூமராங்), இடுப்பில் ஜமதாடு (ஒருவகை கத்தி) என விதவிதமான ஆயுதங்களுடன் மதுரை நோக்கிப் புறப்படுகிறார் கள்ளழகர். அழகர் மலையிலிருந்து தங்கப்பல்லக்கில் புறப்பட்டுவரும் அவர் , வழிநெடுக பக்தர்களால் ஏற்பாடு செய்யப்படுகிற ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட மண்டகப்படிகளில் ஆசி வழங்கிவிட்டு , நான்காம் நாள் இரவு தல்லாகுளம் பெருமாள் கோயிலுக்கு வந்து சேருகிறார்.

அதற்கு முன்னதாக மதுரை எல்லையான மூன்றுமாவடியில் அழகரை மக்கள் எதிர்கொண்டு அழைக்கும் எதிர்சேவை நிகழ்ச்சி களைகட்டுகிறது.

நான்காம் நாள் இரவு தல்லாகுளம் பெருமாள் கோயிலில் கள்ளழகருக்கு அபிஷேகம் நடக்கும். இந்த அபிஷேகத்துக்கும் நூபுரகங்கையிலிருந்து தீர்த்த நீர் தலைச்சுமையாகக் கொண்டு வரப்படுகிறது. அபிஷேகம் முடிந்ததும் அழகருக்கு அலங்காரம். இதிலும்கூட ஒரு நம்பிக்கை. அழகருக்கான ஆடைகள், அலங்காரப் பொருட்கள் அனைத்தும் ஒரு பெரிய மரப்பெட்டியில் இருக்கும்.

இந்தப் பெட்டிக்குள் சிவப்பு , வெள்ளை, பச்சை, மஞ்சள், ஊதா...என பல வண்ணங்களில் பட்டுப்புடவைகள் இருக்கும். கோயிலின் தலைமைப் பட்டர் அந்தப் பெட்டிக்குள் கைவிட்டு ஏதாவதொரு புடவையை எடுப்பார். அவர் கையில் எந்த வண்ணப் புடவை சிக்குகிறதோ , அது அன்றைய தினம் அழகருக்கு அணிவிக்கப்படும். அழகர் எந்த வண்ணப் புடவை கட்டி ஆற்றில் இறங்குகிறாரோ அதற்கேற்ப அந்த வருடத்தில் நல்லது - கெட்டது நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

பச்சைப்பட்டு கட்டி வந்தால் நாடு செழிப்பாக இருக்கும். சிவப்புப் பட்டு கட்டிவந்தால் அந்த வருடம் போதிய விளைச்சலுமிருக்காது. நாட்டில் அமைதியும் இருக்காது. பேரழிவு ஏற்படும்.வெள்ளை மற்றும் ஊதாப்பட்டு கட்டி வந்தால் நாடு இடைப்பட்ட நிலையில் இருக்கும்.

மஞ்சள்பட்டு கட்டிவந்தால் , அந்த வருடத்தில் மங்களகர நிகழ்வுகள் நடக்கும். இப்படி நம்பிக்கை இருப்பதால் 'ஆற்றில் இறங்க வரும்போது அழகர் என்ன கலர் பட்டுடுத்தி வரப் போறாரோ ?' எனப் பக்தர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

**ஐந்தாம் நாள்** பௌர்ணமியன்று , அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம். இதற்கு தல்லாகுளத்தை விட்டு கள்ளழகர் கிளம்பியதுமே தண்ணீர் பீய்ச்சும் வைபவம் தொடங்குகிறது. அந்தக் காலத்தில் அழகர் வருவதற்குப் புதிதாகப் பாதை அமைத்ததால் தூசி கிளம்பாமல் இருப்பதற்காகவும் , வெப்பத்தைத் தணிப்பதற்காகவும் தண்ணீர் பீய்ச்சும் வழக்கத்தை வைத்திருக்கிறார்கள். காலப்போக்கில் தண்ணீர் பீய்ச்சுவது ஒரு முக்கிய வைபவமாக மாறிப்போனது. அழகர் ஆற்றில் இறங்கி வண்டியூர் போய்ச் சேரும் வரை இந்த வைபவம் கலகலப்பாக நடக்கிறது.

**ஆறாம் நாள்** அதிகாலையில் அழகருக்கு ஏகாந்த சேவை. பயணக்களைப்பு நீங்குவதற்காக சந்தன அலங்காரம் பண்ணிக்கொள்ளும் கள்ளழகர் , வண்டியூர் பெருமாள் கோயிலை வலம் வருவார். அதன்பிறகு சர்ப்பவாகத்தில் புறப்பட்டு தேனூர் மண்டபம் (இந்த மண்டபம் வைகை ஆற்றுக்குள் திருமலைநாயக்கரால் கட்டிக் கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே தேனூரில் நடந்து கொண்டிருந்த வைபவங்கள் இப்போது இந்த மண்டபத்தில் நடக்கிறது) வந்து சேருகிறார் அழகர்.

தேனூர் மண்டபத்தில் தங்க கருட வாகனத்துக்கு மாறும் அழகர் , அங்கிருந்து மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் தருகிறார். பிறகு தேனூர் மண்டபத்திலிருந்து மதுரை நோக்கிவரும் அழகர், ராமராயர் மண்டகப்படி மண்டபத்துக்கு ஆறாம்நாள் இரவு வந்து சேருகிறார். அன்றிரவு அங்கு தங்குகிறார். இரவு முழுவதும் தசாவதார அலங்காரங்களில் தோன்றி பக்தர்களைப் பரவசப்படுத்தும் அழகர்,

**ஏழாம் நாள்** காலையில் அங்கிருந்து அனந்தராயர் பல்லக்கில் (திருமலை நாயக்கரின் திவானால் செய்து கொடுக்கப்பட்ட இது முழுக்கத் தந்தத்தால் இழைக்கப்பட்டது) தல்லாகுளத்திலுள்ள சேதுபதிராஜா மண்டபம் வரைக்கும் வருவார். அன்றிரவு அங்கு அழகருக்கு அலங்காரம் கலைக்கப்பட்டு பூப்பல்லக்கில் ஜோடனை நடக்கும்.

**எட்டாம் நாள்** அதிகாலையில் பூப்பல்லக்கில் மலைநோக்கிக் கிளம்பும் அழகர் வழிநெடுக பூஜை புனஸ்காரங்களை ஏற்றுக்கொண்டு **ஒன்பதாம் நாள்** காலையில் அழகர் கோயிலைச் சென்றடைவார்.

**பத்தாம் நாள்** பயணக்களைப்பு நீக்குவதற்காக உற்சவசாந்தி அபிஷேகம் நடக்கிறது. அத்துடன் சித்திரைத் திருவிழாவின் பத்து நாள் கொண்டாட்டங்கள் சுபமாக நிறைவுற்று மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புகிறது மதுரை.

காவல் ஜமீன்

அந்தக் காலத்தில் கள்ளழகரின் பாதுகாவலராக வெள்ளியங்குன்றம் ஜமீன்தார் நியமிக்கப்பட்டிருந்தார். இன்றுவரை அந்த ஜமீன் வாரிசுகள்தான் கள்ளழகருக்குப் பாதுகாப்பு. இன்றும் ஜமீன்தார் வந்து அவருக்குரிய மரியாதைகள் வழங்கப்பட்ட பிறகுதான் கோயிலைவிட்டு மதுரைக்குக் கிளம்புவார் அழகர்.

அந்தக் காலத்தில் அழகருக்குப் பாதுகாவலாகக் குதிரை பூட்டிய சாரட் வண்டியில் அழகரைப் பின்தொடர்ந்து வந்துகொண்டே இருப்பார் ஜமீன். இப்போது வண்டிதான் மாறியிருக்கிறது. பத்து நாட்களும் அவர் அழகருடன் இருப்பார். இப்போதும் அதே வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

# எம்.ஜி.ஆர். நினைவு தின பதிவாக

என்ஜினியரிங் படிக்க ஆசைப்பட்டேன். ஆனா பணவசதி இல்ல. எம்.ஜி.ஆருகிட்ட போய் உதவி கேட்கலாமுன்னு போயிருந்தேன். எவ்வளவு தேவை?ன்னு கேட்டார்.

3 ஆயிரம் தேவைப்படுதுன்னு சொன்னேன். கேட்ட தொகைக்கு உடனே ஏற்பாடு செஞ்சுட்டு காலேஜுல சேர்றதற்கு முன்னால என்னைய வந்து பார்த்துட்டுப் போன்னு சொன்னார்.

காலேஜ் அட்மிஷன் கிடைச்ச பிறகு எம்.ஜி.ஆர் கிட்ட விசயத்தைச் சொல்லலாமுன்னு போனதுமே வீட்டுல இருந்தவங்க டிபன் சாப்பிடச் சொல்லிட்டாங்க. சாப்பிட்டு காத்திருந்தேன்.

அரசியல் காரணமா 1967ல எம்.ஜி.ஆர் ரொம்ப பிஸியா இருந்தார். குளிச்சு முடிச்சுட்டு ஏழு மணிக்கு அவர் ரூமுக்கு வந்தார். வந்ததும் யார் வெளியே உட்கார்ந்திருக்கிறான்னு கேட்டார்.

கலைவாணர் பையன் வந்திருக்கிறார்ன்னு வீட்டுல இருந்தவங்க சொன்னதும் , உடனே வரச்சொன்னார்.

நான் அவர் ரூமுக்குப் போனதும் முதல்ல டிபன் சாப்பிட்டியா ?ன்னு கேட்டார். அடுத்து காலேஜ்ல இடம் கிடைச்சாச்சா?ன்னு கேட்டார்.

இடம் கிடைச்சிடுச்சு. சேரப் போறேன். அதான் அதுக்கு முன்னால உங்கள் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்னு சொன்னேன்.

முன்ன உங்கப்பா எவ்வளவு இன்கம் டாக்ஸ் கட்டுனாருன்னு தெரியுமா?ன்னு கேட்டார். எனக்குத் தெரியாதுன்னு சொன்னேன்.

ஒன்றரைக்கோடி ரூபாய் வரி கட்டினாரு. அப்படின்னா அவர் எவ்வளவு சம்பாதிச்சிருப் பாரு ?ன்னு கேட்டார்.

பல கோடி ரூபா இருக்கும்னு சொன்னேன்.

இப்ப உங்ககிட்ட எவ்வளவு இருக்கு?ன்னு கேட்டார்.

ஒன்னும் இல்லையேன்னு சொன்னேன்.

செல்வம் அழியும். ஆனா கல்வி அழியாது. அதனாலதான் கல்விக்கு உதவி செஞ்சிருக்குறேன். அது உன்னைய கடைசிவரைக்கும் காப்பாத்தும். கைவிடாதுன்னு சொன்னார்.

அவர் சொன்ன மாதிரியே நான் படிச்சு முடிச்சு வேலைக்குப் போய் நல்லா சம்பாதிச்சேன். இப்பவும் எனக்கு மாசாமாசம் பென்ஷன் வருது.

- Nallathambi (son of Kalaivanar N.S.Krishnan) **அவர்கள் ஆல்பத்திலிருந்து**.

# இறைவனின் கருவியா நீங்கள்?

## கீதை காட்டும் பாதை

- என்.கணேசன்

இறைவனின் விஸ்வரூபத்தைத் தரிசித்த பின் அர்ஜுனன் மெய்சிலிர்க்க, தலைவணங்கிக் கைகூப்பிச் சொல்ல ஆரம்பித்தான்.

லோகநாதா! விஸ்வரூபா! எண்ணிலடங்காத புஜங்கள். வயிறுகள் , முகங்கள், கண்களுடன் கூடியவனாய், முடிவில்லாத உன் உருவத்தை எங்கும் காண்கிறேன். உன் உருவத்தின் முடிவையோ , நடுவையோ, அடியையோ எனக்குக் காண முடியவில்லை.

அறிய வேண்டிய பொருளாகக் கூறப்பட்ட அழிவில்லாத பரம்பொருள் நீ. இந்த உலகத்திற்கு உயர்ந்த ஆதாரம் நீ. அழிவில்லாதவன் நீ. நிலையான தர்மத்தை ரட்சிப்பவன் நீ. சனாதன புருஷன் நீயே என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

மகாத்மாவே! நீ ஒருவனே ஆகாயம் பூமிகளின் இடைவெளியிலும் , சகல திக்குகளிலும் பரவியிருக்கிறாய். அற்புதமாகவும் , உக்கிரமாகவும் உள்ள உன்னுடைய இந்த உருவத்தைக் கண்டு மூவுலகும் அச்சத்தால் நடுங்குகின்றன. நானும் நடுங்குகின்றேன். உன்னைக்கண்டு நான் மனம் கலங்கி தைரியத்தையோ, அமைதியையோ அடைய முடியாமல் இருக்கிறேன்.

தேவர்களின் அரசனே! உலகின் உறைவிடமே! கோரைப்பற்களால் பயங்கரமானதும் , பிரளய காலத்து அக்கினி போன்றதுமான உன் முகத்தைப் பார்த்ததுமே எனக்குத் திக்குத் தெரியவில்லை. அமைதியும் ஏற்படவில்லை. இந்த அரசர்களின் கூட்டங்கள். திருதராஷ்டிரனின் புத்திரர்கள் , பீஷ்மர், துரோணர், கர்ணன் இவர்கள் மட்டுமல்லாமல் நம் சேனைத்தலைவர்கள் எல்லோருமே கூட கோரைப்பற்களுடன் கூடிய பயங்கரமான உன்னுடைய வாய்களில் வெகுவேகமாய் நுழைகிறார்கள். சில தலைகள் பொடியாக்கப்பட்டு பற்களுக்கிடையில் சிக்கியிருப்பதைக் காண்கிறேன்.

நதிகளின் பல வெள்ளங்கள் சமுத்திரத்தை நோக்கி எப்படி ஓடுகின்றனவோ அப்படியே இந்த மானிட வீரர்கள் சுடர் விட்டெறியும் உன் வாய்களில் பிரவேசிக்கிறார்கள்.

தேவ சிரேஷ்டனே! உக்கிர ரூபம் கொண்ட நீ யார்? எனக்குச் சொல். உனக்கு நமஸ்காரம். அருள் புரிவாயாக!ஆதிமூலமான உன்னைப் பற்றி நான் அறிய விரும்புகிறேன். உன்னுடைய செய்கை என்னவென்று எனக்குப் புரியவில்லை.

இறைவனுடைய விஸ்வரூப தரிசனம் ஆரம்பத்தில் சஞ்சயன் சொன்னது போல் ஆயிரம் சூரியன்கள் ஒருசேரத் தோன்றியது போல் ஒளிமயமாக இருந்தாலும் உற்று உள்ளே பார்த்த போது அர்ஜுனனுக்கு வேறுபல உணர்வுகளையும் ஏற்படுத்தி விட்டது. இறைவனின் முடியையோ. அடியையோ. நடுவையோ காண முடியாமல் போன போது அவன் பிரமிப்பை உணர்ந்தான். வேதங்களில் அறிய வேண்டிய அழிவில்லாத பரம்பொருள் இவன் என்றே உணர்ந்தான். தர்மத்தைக் காப்பவனாகவும் அறிந்தான். ஆனால் அற்புதமாகத் தோன்றிய தோற்றம் , இறைவனின் அழிக்கும் சக்தியை அறிய ஆரம்பித்த போது அச்சம் தருவதாகவும் மாற ஆரம்பித்தது.

பிரளய காலத்து அக்கினியாய் பகவானின் முகம் தெரிய ஆரம்பித்தது. பகவானின் வாயில் பயங்கரமான கோரைப்பற்களை அர்ஜுனன் பார்க்கிறான். அப்படி ஒரு வாயல்ல பல்லாயிரம் வாய்களை அவன் பார்க்கிறான். தற்போது உயிருடன் இருக்கும் அவன் உறவுகளும் , அரசர்களும், வீரர்களும் வேகமாக அந்த வாய்களில் பிரவேசித்து மடிவதைக் காண்கிறான். அது அழகான காட்சி அல்ல. அதிபயங்கர மான காட்சி. நதி வெள்ளங்கள் கடலில் சங்கமிப்பது போல குருக்ஷேத்திர வீரர்கள் அந்த வாய்களில் சென்று மடிவதைப் பார்க்கையில் அச்சத்தை உணர்ந்து அர்ஜுனன் நடுங்கினான்.

இது அவன் அறிந்த உருவம் அல்லவே. அழகுக்குப் பெயர் போன ஸ்ரீகிருஷ்ணரின் உருவத்திற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லையே என்று குழம்பியவன் நீ யார் ? இது என்ன தோற்றம் ? என்று வணங்கிக் கேட்கிறான்.

அதற்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் சொல்கிறார்.

உலகத்தை அழிக்கும் காலன் நான். உலகத்தை அழிப்பதற்காகத் தொடங்கி இருக்கிறேன். யுத்தபூமியில் நிற்கும் இந்த வீரர்கள் நீ இல்லா விட்டாலும் அழியப் போகிறார்கள்

ஆகவே நீ எழுந்திரு. எதிரிகளை வென்று புகழை அடைவாயாக. செல்வம் நிறைந்த ராஜ்ஜியத்தை அனுபவி. இவர்களெல்லாம் ஏற்கெனவே என்னால் கொல்லப்பட்டவர்கள். நீ நிமித்தமென்ற ஒரு கருவியாக மட்டும் இரு

குருக்ஷேத்திர யுத்த பூமியில் காலனாகவே நின்று கொண்டிருப்பதை பகவான் தெரிவிக்கிறார். அந்த வீரர்கள் எல்லாம் முன்னமே மரணத்தின் பிடியில் சிக்கியாகி விட்டார்கள் என்றும் அர்ஜுனன் இல்லா விட்டாலும் அவர்கள் மாண்டு போவது உறுதி என்றும் கூறிய பகவான் அவர்கள் எல்லாம் தன்னால் ஏற்கெனவே கொல்லப்பட்டவர்கள் என்பதைத் தெரிவிக்கிறார். அதனால் அர்ஜுனன் யுத்தம் புரிந்து அவனாகக் கொல்லப்போவதில்லை என்றும் பகவானின் கருவியாகவே இருக்கப் போகிறான் என்றும் தெரிவித்து அவன் மனதில் எழுந்திருந்த குற்ற உணர்வைக் கலைகிறார்.

இறைவனின் கருவியாக இரு என்று சொல்வதைப் பலரும் பல விதங்களில் தங்கள் தவறுகளுக்குச் சாதகமாகப்பயன்படுத்திக் கொள்வதை இன்று நம்மால் பார்க்க முடிகிறது. இறைவனின் கட்டளைக்கிணங்கி இறைவனின் கருவியாகச் செயல்பட்டு வருவதாகச் சொல்லிப் பலரும் தங்கள் பாவச்செயல்களுக்கும் இறைவனைக் கேடயமாக வைத்துக் கொள்கிறார்கள்.

ஆனால் கருவிக்கு விருப்பு வெறுப்பு இருக்காது. கரண்டியால் பரிமாறுவது தேன் ஆனாலும் சரி , கசப்பான மருந்தானாலும் சரி. வேறெந்த சுவை கொண்ட பதார்த்தமானாலும் சரி கரண்டி என்னும் கருவிக்கு அதில் எந்த அபிப்பிராயமும் இல்லை. விருப்பு வெறுப்பும் இல்லை. அதற்கென்று அதில் தனிப்பட்ட இலாப நஷ்டங்கள் இல்லை. எதைப் பரிமாற வேண்டும் என்று பரிமாறும் கை விரும்புகிறதோ அதைப் பரிமாறும் கருவியாக கரண்டி இருந்து விடுகிறது. அப்படியே ஒரு செயலில் எந்த விருப்பும் , வெறுப்பும் இல்லாத ஒரு கருவியாக நாம் இருக்கிறோமா , இல்லையா என்பதை வைத்தே நம்மை இயக்குவது இறைவனா,ஈகோவா என்பதை நாம் பிரித்தறிய முடியும்.

பாதை நீளும்....

# யாதவ பேரவை திருமண உதவித் திட்டம்

தமிழ்நாடு யாதவ பேரவை சார்பாக திருச்சி எடத்தெருவில் வசிக்கும் திரு. ஏழுமலை யாதவ் மற்றும் கோவிந்தாம்மாள் அவர்களின் மகள் திருமதி. யோகலட்சுமி அவர்களின் திருமணத்திருக்கு உதவும் வகையில் கட்டில், பீரோ, மெத்தை மற்றும் மற்றோரு தம்பதியருக்கு ரூபாய் 5000/- நன்கெ ாடையாக பேரவையின் சார்பாக வழங்கப்பட்டது.

திருச்சி வெங்காய மண்டியில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு திருச்சி மாவட்ட வெங்காய மண்டியின் தலைவர் திரு. வெள்ளையன் அவர்கள் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த யாதவ சங்கங்களின் தலைவர் திரு. சோலைமலை பிச்சை யாதவ் மற்றும் திருச்சி மாநகராட்சியின் துணை மேயர் திருமதி. திவ்யா தனுஷ்கோடி யாதவ் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு யாதவ பேரவையின் கூடுதல் பொதுசெயலாளர் திரு. பா. ஸ்ரீதர் யாதவ் அவர்கள் வரவேற்புறை அளித்தார்.

தென்மாவட்ட யாதவ சங்கங்களின் ஒரிங்கிணைப்பாளர் திரு. தங்கராஜ் யாதவ் அவர்கள் , பாரத முன்னேற்ற கழக தலைவர் திரு. பாரதிராஜா அவர்கள், வழக்கறிஞர் சிந்தை சரவணன் யாதவ் அவர்கள் மற்றும் சில யாதவ சங்கங்களின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இதில் 200க்கும் மேற்பட்ட யாதவ சொந்தங்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது!!








# உச்சநீதிமன்றத் தீர்ப்பின் இடஒத்க்கீட்டுச்சட்டம் இயற்றும்நடைமுறை பற்றிய சிறுவிளக்கம்

மாநில அரசுக்கு 102க்கும் 105க்கும் இடைப்பட்ட காலத்தைத் தவிர மற்ற எல்லாக்காலங்களிலும் சரத்து 246 மற்றும் 15, 16ன் கீழ் முழு அதிகாரம் இருந்தது என்று பார்த்தோம். ஆனால் 246 உள்ள நிபந்தனையின்படி மாநில அரசின் எல்லாச்சட்டமும் அரசமைப்புச்சட்டத்திற்கு உடபட்டுத்தான் இருக்க முடியும் முறணாக அல்ல. சட்டம் 8/2021 பல அரசமைப்புச்சட்ட நடைமுறியகளை மீறியுள்ளது. அதில் ஒன்று சரத்து 31. இதோ அந்த பிரிவு

"31B. Validation of certain Acts and Regulations.--Without prejudice to the generality of the provisions contained in Article 31A, none of the Acts and Regulations specified in the Ninth Schedule nor any of the provisions thereof shall be deemed to be void, or ever to have become void, on the ground that such Act, Regulation or provision is inconsistent with, or takes away or abridges any of the rights conferred by, any provisions of this Part, and notwithstanding any judgment, decree or order of any court or Tribunal to the contrary, each of the said Acts and Regulations shall, subject to the power of any competent Legislature to repeal or amend it, continue in force."

இந்த பிரிவு அரசியல் அமைப்புச்சட்டத்தில் வருவதற்க்கு பெரும்காரணம் தந்தைப் பெரியாரின் போராட்டம்

ஆனால் I.R. Coelho Vs State of TN (2007) 2 SCC 1 தீர்ப்புக்குப் பிறகு ஒரு சட்டம் ஒன்பதாவது அட்டவணையில் இருந்தாலும் நீதிமன்றம் அது அடிப்படைக் கூறுகளை மீறியுள்ளதா என்று ஆய்வு செய்ய முடியும் என்று கூறிவிட்ட காரணத்தினால்தான் தமிழக சட்டம் 45/1994 ஒன்பதாவது அட்டவணையில் இருந்தாலும் அதற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. ஆனால் இந்த சட்டத்தில் இன்னொரு கட்டுப்பாடும் சேர்ந்தே உள்ளது அப்படி 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்ட சட்டமும் அதிலுள்ள ஒவ்வொரு சரத்துக்களும் அதைத் திருத்தும் வரை தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும் என்பதுதான் அந்த கட்டுப்பாடு. அதாவது மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்பது அல்ல மாநில அரசாங்கத்திற்கு ஒன்பதாவது அட்டவணையில் வைத்திருக்கின்ற சட்டத்தைத் திருத்துவதற்கு அதிகாரம் இருக்கிறது என்று இந்த சரத்தே தெளிவாக கூறுகிறது. அதனால் யாரும் அதிகாரம் இல்லை என்று வாதிட முடியாது. ஆனால் பொதுவெளியில்ன தேவையில்லாத வாதங்களை பார்க்கின்றோம். அட்டவணையில் இருக்கின்ற சட்டத்தை திருத்தும் வரை செயல்பாட்டில் இருக்கும் என்ற காரணத்தினால் அந்த சட்டம் சம்பந்தமாக துணை சட்டமோ அந்த சட்டை அந்த சட்டத்தை மாற்றுகின்ற அளவிற்கு ஒரு சட்டம் இயற்றிய பொழுது அந்த சட்டத்தை திருத்த வேண்டியது அரசியலமைப்புச் சட்டத்தின் கட்டாய நடைமுறை. ஆனால் தமிழக அரசு உயர்நீதிமன்றத்தில் ஒரு நிலைப்பாட்டையும் உச்சநீதிமன்றத்தில் ஒரு நிலைப்பாட்டையும் எடுத்ததை அந்த இரண்டு தீர்ப்புகளிலும்லும் உள்ள சம்பந்தப்பட்ட பகுதிகளை வாசித்தால் புரிந்து விடும்.

## உயர்நீதிமன்றத்தில் அரசுவைத்த வாதம்

30. Whereas the learned Advocate General appearing for the State argued that the impugned Act has not varied the reservation of 20% to MBC, but, within 20% reservation, it has only apportioned the reservation into three categories in proportion to their population and hence, there is no illegality in the impugned Act.

## உயர்நீதிமன்ற தீர்ப்பு

32. In our view, a combined reading of the Act 45 of 1994 as well as the impugned Act would make it clear that the impugned Act (Act 8 of 2021) has been enacted as a Special Act and not by way of Amendment Act to amend the provisons of the Act 45 of 1994. Article 31-B of the Constitution of India mandates that only amendment or repeal alone is permissible and not by way of overruling of the said Act as the same has been placed in the Ninth Schedule of the Constitution of India

## உச்சநீதிமன்றத்தில் அரசுவைத்த வாதம்

41. Mr. Dwivedi proffered arguments on a different aspect of this issue. He submitted that the High Court completely misunderstood the scope of Article 31-B. While Article 31-B provided protection to stat utes placed within the Ninth Schedule against challenge in terms of Part III of the Constitution, it cannot be interpreted to restrict the plenary powers of legislation under Article 246 and alter the federal distribution of powers. Additionally, he urged that Article 31-B did not prescribe any procedure for amendment or repeal of a statute in the Ninth Schedule and therefore, the High Court's observation on amending statutes also being placed in the Ninth Schedule was only evidence of the procedure adopted with respect to certain amending statutes and not a requirement of every amending statute. Assuming that this Court was not inclined to accept that the 2021 Act was in exercise of Section 7 of the 1994 Act, even then the 2021 Act in its own right is a valid piece of legislation, without the protection of Article 31-B as the incurred consequence. To support his submissions, he placed reliance on judgments of this Court in Sri Ram Ram Narain Medhi (supra), Chandra Sekhar Singh Bhoi (supra), Godavari Sugar Mills Ltd. (supra) and UCO Bank v. Dipak Debbarma.

## உச்சநீதிமன்ற தீர்ப்பு

77(iv) Placing of the 1994 Act under the Ninth Schedule cannot operate as a hurdle for the State to en act legislations on matters ancillary to the 1994 Act. Legislative competence of the State Legislature can only be circumscribed by express prohibition contained in the Constitution itself and Article 31-B does not stipulate any such express prohibition on the legislative powers of the State

சரத்து 31 அரசின் அதிகாரத்தை கட்டுப்படுத்தவில்லை அந்த அட்டவணையில் உள்ள சட்டத்தைப் பாதுகாக்கின்றது என்பது விதி. அது தேவையில்யென்றால் அது தலைவிதி. 69 த்திற்கு தலைவலி.

எனவே மேற்படி தீர்ப்புக்களின் சாரம் சட்டம் 45/1994யைத் திருத்தாமல் அதன் கூறுகளை மாற்ற முடியாது. அச்சட்டத்தை மாற்றுவதற்கு அரசுக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் மாற்றிய சட்டம் மீண்டும் 9வது அட்டவணையில் வைக்கவில்லையென்றால் மாற்றப்பட்ட சட்டத்திற்கு பாதுகாப்பு கிடையாது. 69 சட்டத்திற்கு பாதுகாப்பு வேண்டாம் நாங்கள் 9வது அட்டவணையில் வைக்காமல் ஒரு சாதிக்காக சட்டத்தை திருத்தியுள்ளோம் என்று வாதிட்டது உள்ளபடி சமூகநீதிக்கு மிகப்பெரிய சறுக்கு. விரைவில் பெரிய ஆபத்து வரலாம். ஆனால் சட்டம் 45/1995க்கு மேலும் ஒரு அசைக்கமுடியாத பாதுகாப்பு 31ல் இருந்தது அதையும் இத்தீர்ப்பு தகர்த்துவிட்டது (அதை நாளை பார்ப்போம்). இப்போது சட்டம் 45/1994 காக்க வேண்டு மானால் சாதிவாரி கணக்கெடுப்பு தவிர்க்க முடியாதது. ஒரு சாதிக்கு மட்டும் புள்ளிவிபரம் சேகரிப்பது மேலும் ஆபத்தானது. சமூகநீதியை உருக்குலைக்கும் புற்றுநோய்.

# ஆசிரியர் சமுதாயத்திற்கு ஒரு விண்ணப்பம்…

ISRO என்பது பற்றித் நமக்குத் தெரியும் ஆனால் தெரியாத ஒன்று உண்டு. பள்ளியில் படிக்கும் நம் மாணவர்களை குறிப்பாக +1 படிக்கும் மாணவர்களை அழைத்துச் செல்ல ஒரு MP க்கு .2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. அவ்வாறு செல்லும் மாணவர்களுக்கு

ஒரு வருடம் பயிற்சியளிக்கிறார்கள். அவர்கள் +2 தேர்வில் இயற்பியல் வேதியியல் மற்றும் கணக்கில் தலா 65 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் நுழைவுத்தேர்வு எழுதலாம்.

அதில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் கட்டணமின்றி நான்கு வருடங்கள் பொறியாளர் பட்டப் படிப்பை படிப்பது மட்டுமல்ல அவர்கள் தேர்ச்சி பெற்றவுடன் இளநிலைப் பொறியாளராக பணிநியமணம் பெறுவார்கள்.

இதுவரை நான் என் பள்ளியில் 45 மாணவர்களை உருவாக்கியுள்ளேன். இது பெருமைக்காக அல்ல. இது பற்றி தெரியாதவர்கள் தெரிந்து அவர்களும் சில ISRO விஞ்ஞானிகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம்தான்.

இது பற்றிய விவரம் வேண்டுவோர்

திரு. **பாலமோகன்**, ISRO SCHOOL EDUCATIONAL DIRECTOR அவர்களை
78928 98919 மற்றும் 94814 22237 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.



**கண்ணீர் அஞ்சலி**

For OYM April issue. கோவை பிரபல சீட்டு நிறுவன (ஸ்ரீ துளசி தயாளன் சிட்பண்ட்ஸ்) அதிபர் திரு. V. தயாளன் அவருடைய தகப்பனார்

## திரு. D. தாமோதரன்

அவர்கள் 28-03-2022 திங்கட்கிழமை மாலை வைகுண்ட பிராப்தி அடைந்தார். அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்வுகள் 29-03-2022 காலை அபிராமி மருத்துவமனை பின்புறம் உள்ள திரு. D.தயாளன் அவர்களது இல்லத்திலும். நல்லடக்கம் சுமார் 11.30 மணி அளவில் மாச்சம்பாளையம் இடுகாட்டிலும் நடைபெற்றது

# எல்லா வரிகளும் வாழ்வின் முழு தத்துவத்தைச் சொல்கிறது..... முழு பாடலும்... அதன் பொருளும்.... உங்களுக்காக

* " யாதும் ஊரே; யாவரும் கேளிர்;*

* தீதும் நன்றும் பிறர்தர வாரா; *

* நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;..... *

*சாதலும் புதுவது அன்றே:... *

*வாழ்தல் இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே;

*முனிவின் இன்னாது என்றலும் இலமே;

*மின்னோரு வானம் தண்துளி தலைஇ ஆனாது *

*கல்பொருது இரங்கும்வ மல்லல் பேர்யாற்று *

*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் *

*முறைவழிப் படூஉம் என்பது *

*திறவோர்காட்சியின் தெளிந்தனம்...*

* ஆதலின் மாட்சியின் *

பெரியோரை வியத்தலும் இலமே; *

*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. *

- **கணியன் பூங்குன்றனார்**

## பாடலின் வரிகளும், பொருளும்:

### * " யாதும் ஊரே; யாவரும் கேளிர்; " *

எல்லா ஊரும் எனது ஊர்.... எல்லா மக்களும் எனக்கு உறவினர்என்று நினைத்து , அன்பே வாழ்வின் அடிப்படை,ஆதாரம் என்று வாழ்ந்தால், இந்த வாழ்வு நமக்கு எவ்வளவு இனிமையானது........... சுகமானது......

*** " தீதும் நன்றும் பிறர் தர வாரா...." ***

தீமையும், நன்மையும் அடுத்தவரால் வருவதில்லை........ எனும் உண்மையை , உணர்ந்தால், சக மனிதர்களிடம், விருப்பு வெறுப்புஇல்லா ஒரு சம நிலை, சார்ந்த வாழ்வு கிட்டும்.....

***"நோதலும் தனிதலும்***
***அவற்றோ ரன்ன...."***

துன்பமும் ஆறுதலும்கூட மற்றவர் தருவதில்லை.... மனம் பக்குவப்பட்டால் , அமைதி அங்கேயேகிட்டும்...

***"வாழ்தல்இனிதுஎன* *மகிழ்ந்தன்றும் இலமே***
***முனிவின் இன்னாது என்றலும் இலமே....."***

இந்த வாழ்க்கையில் எது , எவர்க்கு, எப்போது, என்னாகும் என்று எவர்க்கும் தெரியாது..... இந்தவாழ்க்கை மிகவும் நிலை அற்றது..... அதனால் , இன்பம் வந்தால் மிக்க மகிழ்வதும் வேண்டாம்... துன்பம் வந்தால் வாழ்க்கையை வெறுக்கவும் வேண்டாம்...... வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து இயல்பாய் வாழ்வோம்......

*** "மின்னோரு* *வானம்* *தண்துளி தலைஇ* *ஆனாதுகல்பொருது***
***இரங்கும்வ மல்லல்* *பேர்யாற்று நீர்வழிப்* *படூஉம் புணைபோல்***
***ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது திறவோர் காட்சியின் தெளிந்தனம்...." ***

இந்த வானம் நெருப்பாய் , மின்னலையும் தருகிறது.... நாம் வாழ மழையையும் தருகிறது..... இயற்கை வழியில்அது , அது அதன் பணியை செய்கிறது.... ஆற்று வெள்ளத்தில் , கற்களோடு, அடித்து முட்டி செல்லும்படகு போல , வாழ்க்கையும், சங்கடங்களில் அவர் , அவர் ஊழ்படி அதன் வழியில் அடிபட்டு போய்கொண்டு இருக்கும்.... இது இயல்பு என மனத்தெளிவு கொள்ளல் வேண்டும்...

***"ஆதலின்* *மாட்சியின்***
***பெரியோரை வியத்தலும்* *இலமே;***
***சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே*...."**

இந்த தெளிவு பெற்றால்..... , பெரிய நிலையில் உள்ள பெரியவர்களைப் பாத்து மிகவும் வியந்து பாராட்டவும் வேண்டாம்... சிறிய நிலையில் உள்ள சிறியவர்களைப் பார்த்து ஏளனம் செய்து இகழ்வதும் வேண்டாம்..... அவரவர் வாழ்வு அவரவர்க்கு..... அவற்றில் அவர் அவர்கள் பெரியவர்கள்...

*** இதை விட வேறு எவர்***
*** வாழ்க்கைப் பாடத்தை ***
*** சொல்லித் தர முடியும்?***

அன்பிற்கினிய உறவுகளே !

21.04.22 வியாழக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு, சென்னை எம்.ஆர்.சி, கூட்ட அரங்கில் பிற்படுத்தப்பட்ட மற்றும் வன்னியர் அல்லாத மிகப் பிற்படுத்தப்பட்ட, நமது 255 சமுதாய மக்களுக்காக, சட்டமன்றத்திலும், சட்டமன்றத்திற்கு வெளியிலும் கடந்த ஒன்றரை வருடகாலமாக , நமது சமுதாயமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த சட்டமன்ற உறுப்பினரும் அல்லது அமைச்சரும் குரல் கொடுக்கவில்லை என்பதால், இந்த சமுதாயத்தைச் சேர்ந்த சுமார் 150 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தந்த சமுதாயங்களை சேர்ந்த நமது மக்கள் அரசியல் சார்பின்றி நமது சமுதாயங்களின் நன்மைக்காக நமது குழந்தைகளின் எதிகாலத்திற்க்காக இட ஒதுக்கீட்டில் நம்மை புறக்கணிக்கக் கூடாது. ஜாதிவாரி கணக்கு எடுக்காமல் கணக்கு எடுக்காமல் நமது உரிமைகளைப் பறிக்கும் தமிழக அரசின் வன்னியர் தனி ஒதுக்கீட்டுக்காக எந்த ஜாதிவாரி கணக்கு எடுக்காமல் எந்த ஆதரவையும் அளிக்கக் கூடாது என்ற நமது உணர்வை வெளிப்படுத்த.

21.04.22 வியாழக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு அனைத்து சமுதாய பிரதிநிதிகளையும் சந்திக்க வருமாறு அவரவர் சமுதாயங்களை சேர்ந்த இளையோர் அந்தந்த MLA-க்களின் இல்லம் சென்று வேண்டுகோள் விடுத்தோம்.



நமது சமுதாய இளைஞர்கள் சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கும் சென்று , நேற்று இருந்த கூட்டத்தை நினைவு படுத்தினார்கள் அப்படி இருந்தும் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ஆர் ஈஸ்வரன் , தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக அதன் செயல் தலைவர் , மயூரா ஜெயக்குமார் சட்டமன்ற உறுப்பினர். திரு.கணேசன் ஆகியோர் தவிர திமுக அதிமுக ,பிஜேபி, மதிமுக, மற்றும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட ஆறு கட்சிகளைச் சேர்ந்த அனைத்து எம்எல்ஏ-க்களும் நமது சமுதாயங்களின் வரவில்லை.

ஆனால் திமுக கூட்டணியில் இருந்த போதும் , கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவரும், இந்திய தேசிய காங்கிரசின் செயல் தலைவர் , பிரதிநிதி, ஆகியோர் வந்திருந்தனர். அவர்களுக்கு நாம் நன்றிக்கடன் பட்டவர்களாவோம். நமது சமுதாய பிரதிநிகள் அனைவரும் அரங்கத்தினுள் வலப்புரம் அமரந்திருக்க MLA -க்களுக்காக ஒதுக்கப்பட்ட இடப்புரத்தில் அமர்ந்திருக்கும் சமுதாய உணர்வு உள்ள இவர்களது புகைப்படங்களை காணலாம்.

தேர்தலின் போது மட்டும் , நான் உங்கள் ஜாதி என்று கூறி ஓட்டு பெற்ற நமது சமுதாய எம்எல்ஏ-க்கள், நமது சமுதாயங்களை புறக்கணித்து , வன்னியர் என்ற ஒரே சமுதாயத்திற்காக அனைத்து வகையிலும், அந்தந்த கட்சி தலைவர்கள் கூறுவதற்கு மட்டும் கட்டுப்பட்டு , நமது மக்கள் இளைஞர்களின் எதிர்காலத்தை சூனியமாக்கி சட்டசபையிலும் வெளியேயும் வன்னிய இட ஒதுக்கீட்டிற்கு மட்டும் ஆதரவாக நடந்து கொள்வது நியாயமா ? இவர்களுக்கு எவ்வாறு பாடம் புகட்டுவது என்பதை விரைவில் முடிவு செய்வோம்.



## தமிழகத்தை சேர்ந்த, சர்வதேச கராத்தை ஜாம்பியன் திரு. ஹரிஹரன் யாதவ்

சென்னையை சேர்ந்த திரு பழனி கோனார் அவர்களுக்கும், சிவகங்கை மாவட்டம், காளையார்

கோயில் அருகிலுள்ள கள்ளல் எனும் கிராமத்தை சேர்ந்த திருமதி. சுமதி என்பவருக்கும் டிசம்பர் 28, 1997ம் ஆண்டு மகனாக பிறந்தவர் திரு.ஹரிஹரன் யாதவ் அவர்கள்...!!.

தற்போது சென்னை போரூர் அருகிலுள்ள கோவூர் எனுமிடத்தில் குடும்பத்தோடு வசித்து வருகிறார்...!!. திரு.R.பழனி கோனார் அவர்கள் கோவூர் ஊராட்சிக்குட்பட்ட 6வது வார்டு கவுன்சிலராக இருக்கிறார்கள்..!!.

திரு ஹரிஹரன் அவர்கள் BBA படித்த ஒரு பட்டதாரி ஆவார்..! தன்னுடைய தந்தை பழனி அவர்களுக்கு கராத்தையில் ஆர்வம் இருந்தும் , இந்த துறையில் சாதித்து பெரிய இடத்திற்கு வர வேண்டுமென்று, கனவாக இருந்தாலும் அந்த காலகட்டத்தில் பொருளாதார ரீதியாக பின் தங்கிய இருந்த காரணத்தினால், தன் கனவை தன் பிள்ளையான ஹரிஹரனுக்கு கடத்தி இருக்கிறார்..!!.

ஹரிஹரனுக்கு 5 வயது ஆகும்போதே பழனி அவர்கள் , தன் மகனான ஹரிஹரனை கராத்தை வகுப்புக்கு அனுப்பி வைத்து இருக்கிறார்..! இந்தியாவில் மட்டும் ஹரிஹரன் அவர்கள் 20 மாநிலங்களுக்கு மேலாக கராத்தை சாம்பியனுக்காக தன்னுடைய அணியை அழைத்து சென்று வந்து இருக்கிறார்.!

தமிழகத்தில் கராத்தை அணியில் முதல் 10 இடம் யாரென்று தேடி பார்க்கையில் , ஹரிஹரன் அவர்களது அணியானது முதல் 3 இடத்திற்குள் இருக்கிறது என்பது மிகவும் பெருமையான விசயமாகும்..! 2019ம் ஆண்டில் மலேசியாவில் நடந்த 10 நாடுகளுக்கு இடையேயான கராத்தை போட்டியில் தங்க பதக்கம் வென்றவர் ஹரிஹரன் அவர்கள்.! அவரது மாணவர்கள் 3 நபர்கள், முதல் 3 பதக்கங்களை வென்று உள்ளார்கள்....!!!

சமீபத்திய நிகழ்வாக தெலுங்கான மாநிலத்தின் மேயரான திரு கஜ்ஜெலா நாகேஷ் அவர்கள் இருக்கிறார்கள், அவர்களது தலைமையில் நடந்த கராத்தை விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற ஹரிஹரன் தலைமையிலான அணியானது , மேயர் அவர்களுக்கு வீரன் அழகுமுத்து கோனின் புகைப்படத்தை வழங்கி தன்னுடைய இன உணர்வை வெளிபடுத்தினார் ஹரிஹரன் அவர்கள்.!

தவிர, காராத்தை விளையாட்டு போட்டிகளில் , யார் தலைமையில் நடந்தாலும் , அவ்வாறு த-ை லமை வகிக்கும் அந்த முக்கிய தலைவருக்கு வீரன் அழகுமுத்து கோனின் புகை படத்தை மேடையில் பரிசாக கொடுப்பதை வழக்கமாக வைத்து இருக்கிறார்..!!. இதுவரை எத்தனை அழகுமுத்து கோனின் புகைப்படம் கொடுக்கப்பட்டது என நாம் அழைத்து கேட்ட போது , அதிலெல்லாம் கணக்கு இல்லை என்று புன்னகைக்கிறார் ஹரிஹரன்....!!!.

வீரன் அழகுமுத்து கோனை இங்கு இருக்கும் அரசியல் கட்சிகள் கண்டுகொள்வது இல்லை, என்கிற பெரும் வேதனையை பல நாட்கள் சுமந்து வந்தேன் , ஆகையால்தான் என்னால் எவ்வளவு தூரம் பயணிக்க முடியுமோ, அவ்வாறு பயணிக்கும் அனைத்து இடங்களுக்கும் வீரன் அழகுமுத்து கோனையும் தூக்கி சென்று வுடுகிறேன்! இன்னும் பல மாநிலங்கள் செல்வேன் , பல நாடுகளுக்கு செல்வேன் , எங்கு சென்றாலும் அந்த கரிசல் காட்டு மாவீரனை தூக்கி சுமந்து சென்று , தலைமையேற்கும் தலைவரிடம் இந்தியாவின் முதல் விடுதலை வீரன் இவர்தான் என்று கொடுத்து வருவேன் என்கிறார் நம் ஹரிஹரன்...!!.

இந்த வயதிலேயே எப்படி இந்த இன உணர்வு என கேட்ட போது பல துறைகளில் சாதிக்க பல திறமையான நபர்கள் யாதவர் சமூகத்தில் இருந்தும் அவர்கள் நிராகரிக்கப்படுவதும் , சமுதாயத்தில் நடக்கும் பல அவலநிலையும் , முக்கியமாக என்னுடைய தந்தை பழனி கோனாரும்தான் காரணம் என்கிறார்.!

சில ஆண்டுகளுக்கு முன்னாள் அநியாயமாக இந்த சமூகத்தில் இறந்து போன பேச்சியம்மாள் , சிவகங்கை தங்கை கவிதா இவர்களின் மரணம்தான் என்னை மிகவும் பாதித்தது , இந்த தமிழ கத்தில் எவ்வளவோ முற்போக்கு கருத்தியல்வாதிகள் இருந்தும் இந்த இரண்டு மரணத்திற்கும் இன்று வரை நியாயம் கிடைக்காமலே போய் விட்டது என்று சற்றே வேதனையோடு முடித்தார் சகோதரர் ஹரிஹரன்...!!!.

மேலும் பல சாதனைகள் படைக்க அனைவரும் வாழ்த்துவோம்..!

திரு.ஹரிஹரன் அவர்களது தொலைபேசி எண் : +91 89392 79895

இது போன்ற பல எண்ணற்ற சாதிக்கும் இளைஞர்களை தொடர்ந்து மக்களுக்கு தெரியபடுத்துவோம்.....!!






# பஞ்ச நாமங்கள்....

எப்படியாவது மனிதன் தம்மை நோக்கி ஓர் அடியாவது எடுத்து வைக்க மாட்டானா??? என கடவுள் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிராறாம்.

**திருமாலின் பஞ்ச நாமங்கள் 5**

**1-வது நாமம்.... "ராமா"**

ராமா ராமா ராமா என்று ஒரு நாளைக்கு எத்தனை தரம் முடியுமோ மனதில் அத்தனை தடவை சொல்லுங்கள். மனதில் சஞ்சலங்கள் , துக்கங்கள், குழப்பங்கள் வரும் போது தனியாக ஓரிடத்தில் அமர்ந்து மனதிற்குள்

"ராம" நாமத்தைச் சொல்லுங்கள். மனம் அமைதி அடைவது நிச்சயம்....ராமா என்ற நாமத்தைக் கேட்டாலே அனுமன் அந்த இடத்தில் வந்து அமர்ந்து விடுகிறானாம்.

**"யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்**
**தத்ர தத்ர ஹ்ருதமஸ்த காஞ்சலிம்"**

பத்தாயிரம் ராமநாமாக்கள் சொன்னால் ஏழு கோடிமந்திரங்கள் சொன்னபலனாம்!

**2-வது நாமம்...."க்ருஷ்ணா"**

இந்த நாமமே பாண்டவர்களைக் கூடவே இருந்து காத்தது..... குந்தி க்ருஷ்ணனிடம் கேட்ட வரம் '"க்ருஷ்ணா!!! எனக்கு கஷ்டங்களைக் கொடு!!! அப்போதுதான் உன்னை மறவாமல் இருப்பேன்."... என்றாள்........ கஷ்டங்களைத் தாங்கும், மன வலிமையைக்கொடுக்கும், நாமம்.....

**3-வது நாமம்..."நாராயணா"**

சிறுவன் ப்ரஹ்லாதனை காத்த ,நாமம். எத்தனை இடர்கள் அவன் அடைந்த போதும்அவனைக் காப்பாற்றிய நாமம்.. பகவானுக்கு பிடித்த குழந்தை அவன்.....ஆண்டாள்தன் , பாசுரத்தில் நாராயணனே நமக்கே பறை,தருவான்...என்று. "ஏ" காரத்தில் பெருமை பொங்க சொன்ன நாமம்.

**4-வது நாமம்.... "கோவிந்தா"**

துச்சாசனன் பாஞ்சாலியை சபையில் துகிலுரித்த போது நிர்கதியாக நின்ற அவளுக்கு கை கொடுத்த நாமம்.... "தனது இரு கைகளையும் உயரத் தூக்கி "கோவிந்தா!! கோவிந்தா!!! எனக் கதறிய போது அவள் மானத்தைக் காப்பாற்றிய நாமம்....... அன்றும் , இன்றும், என்றும் திருமலையில் ஒலித்துக் கொண்டே இருக்கும் நாமம்.......

**5-வது நாமம்... "நரஸிம்மா"**

பக்தர்கள் கேட்டதை உடனே கொடுப்பவனாம். "நாளை என்பதே இல்லை நரசிம்மனுக்கு..... அதனால் தான் ப்ரகலாதன் அழைத்த உடனே தூணைப் பிளந்து கொண்டு வந்தான்..... " நீயே கதி " என சரணடைந்த அடியார்களுக்கு உடனே கஷ்டங்களிலிருந்து விமோசனம் கொடுப்பானாம். "ஆகட்டும் அப்புறம் பார்க்கலாம்" என்று சொன்னதே இல்லையாம்..... அப்படிப்பட்ட கருணாமூர்த்தி அவன்.... அதனால்தான் விஷ்ணு சகஸ்ரநாமத்தில்

"நாரஸிம்ஹவபு ரீமான் கேசவ புருஷோத்தம: என்று நரசிம்மன் பெருமையை புகழ்ந்து சொன்னார் பீஷ்மர்.....

**ராமா! கிருஷ்ணா! நாராயணா! கோவிந்தா! நரஸிம்மா** என்ற இந்த எளிமையான ஐந்து திருநாமங்களையும், எப்போதும் நாத்தழும்பேறக் கூறுவோம். திருமாலின் இந்த திருநாமங்கள்நம்மை உய்விக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!!! :

ஸ்ரீராம ஜெய ராம ஜெய ஜெய ராம
ஓம் நமோ நாராயணாய

# ருத்திராட்சம் பற்றிய....

ருத்திராட்சம் பற்றிய அனைத்து விதமான சந்தேகங்களையும் இப்பதிவு தீர்த்து வைக்கும்..... முழுமையாகப் படித்துவிட்டு.... அர்த்தமுடன் "அணியுங்கள்.......

ருத்திராட்சம் பற்றிய சித்தர் பெருமக்களின் பாடல்களில் கூறப்பட்டுள்ள தகவல். வடமொழியில் ருத்ராக்ஷம் என்பதற்கு ருத்திரனின் கண்கள் என்பதாக பொருள் கூறப்படுகிறது. ருத்திரன் என்பது சிவனை குறிக்கிறது. என்ற மரத்தின் பழத்தில் இருந்து பெறப்படும் கொட்டைதான் இந்த உருத்திராட்சம். இந்த மரங்கள் உலகின் சில பகுதிகளில் மட்டுமே காணப்படுகிறது.

நேப்பாள நாட்டில் விளையும் உருத்திராட்ச மணிகளே தரத்தில் உயர்ந்தனவாக கருதப்படுகிறது..! இயற்கையில் உருத்திராட்ச மணி செம்மையும் , கருமையும் கலந்தேறிய பழுப்பு நிறத்தில் இருக்கும். கடையில் விற்பனைக்கு கிடைக்கும் மணிகள் பெரும்பாலும் மெருகேற்றப்பட்டும் , சாயமேற்றப் பட்டிருக்கும். ருத்ராட்ஷத்தின் - மகிமை! ருத்ராட்ஷம் எவ்வாறு தோன்றியது?

சிவபெருமான் கண்களிலிருந்து தோன்றியது ருத்ராட்ஷம். அதை அணிபவரை அவர் கண்போலக் காப்பாற்றுவார். எனவே அனைவரும் கண்டிப்பாக ஐந்து முக ஒரு ருத்ராட்ஷமாவது எப்போதும் கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும்.

### யார் வேண்டுமானாலும் ருத்ராட்ஷம் அணியலாமா?

ருத்ராட்ஷத்தை யார் வேண்டுமானாலும் அணியலாம். எல்லா நேரத்திலும் அணிந்திருக்கலாம். நீர் பருகும் போதும், உணவு உண்ணும்போதும், தூங்கும்போதும் எல்லாக்காலத்திலும் ருத்ராட்ஷம் அணிந்திருக்க வேண்டும் என்று சிவபெருமானே கூறியுள்ளதாக சிவபுராணம் தெரிவிக்கிறது.

* சிறுவர், சிறுமியர் ருத்ராட்ஷம் அணிவதால் அவர்களின் படிப்புத் திறமை பளிச்சிடும்.

* ருத்ராட்ஷத்தை பெண்கள் அணிந்தால் தீர்க்க சுமங்களியாக மஞ்சள் குங்குமத்தோடு வாழ்வார்கள். இதனால் அவர்களுடைய கணவருக்கும் தொழிலில் வெற்றியும் இல்லத்தில் லட்சுமி கடாசமும் நிறைந்திருக்கும்.

சுத்தபத்தமாக இருப்பவர்கள் தான் ருத்ராட்ஷம் அணிய வேண்டும் என்று சொல்கிறார்களே ? ருத்ராட்ஷம் அணிந்தால்தான் மனமும் , உடலும் தூய்மை அடையும். எனவே உங்களை நீங்களே தாழ்த்திக்கொள்ளாமல் நம்பிக்கையோடு ருத்ராட்ஷம் அணிந்து கொள்ளுங்கள்.

### பெண்கள் ருத்ராட்ஷம் அணியக்கூடாது என சிலர் சொல்கிறார்களே?

